# மத்திய திபெத்தியர்கள் (Tibetans, Central)

**வசிப்பிடம்:** மத்திய திபெத்திய மொழி பேசும் 7,40,000 ற்கும் மேற்பட்ட மக்கள் லாசா (Lhasa) மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் வசிக்கின்றனர். இந்த நகரம் முன்னாட்களில் சுற்றுலாப் பயணிகள் தேடிவரும் வசிகரிப்பு இல்லாத நிலையிலே இருந்தது; தாமஸ் மன்னிங் (Thomas Manning) கி.பி. 1800ல் இந்த நகரத்தைப் பற்றி இவ்வாறு விவரிக்கிறார் "ஆச்சரியமானது அல்லது அழகானதென்று எந்த ஒரு காரியமும் இங்கே இல்லை. வசிப்பிடங்கள் அழுக்காலும் கரித் தூசியாலும் மூடப்பட்டுள்ளன. தெருக்கள், யாக் தோல்களைக் கடித்துக்கொண்டு ஊளையிட்டுக்கொண்டிருக்கும் நாய்களால் நிறைத்திருக்கின்றன. சில சொரி பிடித்த நிலையிலும், சில பட்டினியால் மரிக்கிற நிலையிலும், சில மரித்துக் கழுகுகளால் உண்ணப்பட்ட நிலையிலும் இருக்கின்றன. தெருக்களிலிருந்து அழுகிய வாசனை வருகிறது. சுருக்கமாகச் சொன்னால் நகரம், மன அழுத்தத்தை அதிகரிக்கக்கூடியதாகவும் தரித்திரத்தால் நிறைந்ததாகவும் காட்சியளிக்கிறது"




**அடையாளம்:** திபெத்தியர்கள் தாங்கள் ஒரே இனமென்றும் தங்களை எந்த வகையிலும் ஜாதிகளாகப் பிரிப்பதைக் கடுமையாக எதிர்ப்பதாகச் சொன்னாலும், திபெத்திய குடியுரிமை இவர்களை மொழியின் அடிப்படையில் வெவ்வேறு இனங்களாகப் பிரித்துள்ளது.

**மொழி:** மத்திய திபெத்திய மொழி ஐந்து வட்டார மொழி வழக்குகளைக் கொண்டது. படித்தவர்கள் தங்களுடைய சொந்தப் பகுதியின் மொழியை வழக்கில் வைத்துக்கொண்டு மத்திய திபெத்திய மொழியின் இலக்கிய வகையைக் கற்றுக்கொள்கின்றனர்.

**வரலாறு:** கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து திபெத்தியர்களுடைய எழுதிவைக்கப்பட்ட வரலாற்று ஆவணங்கள் கிடைத்துள்ளன. ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே திபெத்தியர்கள் நாடோடி மேய்ப்பர்களாகத் திபெத்தைச் சுற்றித்திரிந்தார்கள் என்பது அறிந்த காரியம். ஏறக்குறைய கி.பி.600 ல் மாவீரனாகிய யர்லுங்கின் ராஜா நம்ரி கம்பொ திபெத்திய இனங்களை ஒன்றாக இணைத்தார். இவர் நேபாளிலிருந்து ஒரு பெண்ணையும் சீனாவிலிருந்து ஒரு பெண்ணையும் திருமணம் செய்தார். இந்த இரு பெண்களின் தூண்டலினால் இவர் பழமையான பொன் (Bon) மதத்துடன் புத்தமதக் கொள்கைகளை இணைத்தார்.

**பழக்கவழக்கங்கள்:** திபெத்தியர்கள் மொழி, கலாச்சாரம், வரலாறு மற்றும் மதம் இவை எல்லாவற்றிலும் சீனர்களிலிருந்து வேறுபட்டவர்களாக இருந்தபோதிலும் நூற்றாண்டுகளாகச் சீனர்கள், திபெத் சீனாவின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியென்று உரிமை கொண்டாடிவந்தனர். கி.பி.1950ல் சீனர்கள் திபெத்தை முழுவதுமாகக் கைப்பற்றினார் .

**மதம்:** திபெத்திய புத்தமதம் திபெத்தியர்களின் ஜீவ இரத்தமாகும். இந்த மதம் தந்திர-மந்திரம், ஆவி வழிபாடு மற்றும் பலி செலுத்துதலை மையமாகக்கொண்ட சக்திவாய்ந்த திபெத்திய பொன் மதத்தை அடிப்படையாகக்கொண்டது.

**கிறிஸ்துவம்:** அநேக ஆண்டுகளாகவே திபெத் தேசம் கிறிஸ்தவத்திற்கு ஒரு சவாலாகவே இருந்துவருகிறது. "திபெத்திற்குள் சென்று மக்களை இரட்சிப்புக்குள் நடத்துவது சிங்கத்தின் குகைக்குள் சென்று அதன் குட்டிகளைத் திருடுவதற்குச் சமமானது" என்று ஹட்சன் டைலர் (Hudson Taylor) சொல்லியிருக்கிறார். பாக்தாத்திலிருந்த (Baghdad) கிறிஸ்தவ முன்னோடி திமோதி (778 -820) திபெத்திய கிறிஸ்தவர்களைப் பற்றிப் பேசும்போது தான் அவர்களுக்காக ஒரு மிஷனெரியை அனுப்பிவைக்கத் தயாராயிருப்பதாகக் கூறினார். இந்நாட்களில் ஒன்று அல்லது இரண்டு திபெத்திய ஐக்கியங்கள் மட்டுமே லாசாவில் உள்ளன. திபெத்திற்கு மிஷனெரியாகப் போகும் ஒவ்வொருவரும் திபெத்திய லாமாக்கள், சீனா அதிகாரிகள் மற்றும் திபெத்தில் வாழ்ந்துகொண்டு திபெத்திற்கு ஒத்துழைப்பு கொடுக்கும் வெளிநாட்டவர்களின் எதிர்ப்பைச் சந்திக்கவேண்டியதாயிருக்கும். கி.பி.1988 ற்கு பிற்பாடு குறைந்தது ஐந்து நற்செய்தியாளர்கள் கல்லெறிந்து கொல்லப்பட்டுள்ளனர்.




**Population:**
1,044,500 (2000)
1,282,000 (2010)
1,574,100 (2020)

**Countries:** China, India, Nepal, Bhutan, Switzerland, Taiwan, USA, Norway, France, Australia, United Kingdom, New Zealand

**Buddhism:** Tibetan

**Christians:** 200

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Zang, Wei, Weizang, Bhotia, Phoke, Dbus, Dbustsang, Lhasa, Lhasa Tibetan, U, Bhokha, Pohbetian, Tebilian, Tibate

**மக்கள்தொகை:** 569,300 in China (1987,Language Atlas of China); 124,280 in India (1994, India Missions Association); 60,000 in Nepal (1973, Summer Institute of Linguistics); 50,000 in Bhutan (1987, D Bradley); 1,500 in Switzerland also in Taiwan, USA, Norway, France, Australia, United Kingdom, New Zealand

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, மத்திய திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 5 (Lhasa, Chushur, Phanpo, Testhang,Lunrtse)

**திபெத்திய புத்தமதம்:** 98%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி.1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசு திரைப்படம்:** உண்டு

**சு. ஒ. பதிவுகள்:** Lhasa;Tibetan: Colloquial

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** உண்டு

ROPAL **குறியீடு :** TIC

**கிறிஸ்துவத்தின் நிலை**

